From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C. No.548 /19

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Malavizhi | Father/Husband Name | : Yogaraja |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.10.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

**(Accused present.**

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் கிடாரிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எனது கணவர் ஆட்டோ ஓட்டுநராக இருக்கிறார். எனக்கு 3 குழந்தைகள் உள்ளார்கள். என்னுடைய 3-வது மகன் சிவனேசன் 7வது வகுப்பு படித்துள்ளார். அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் கடந்த வருடம், தேதி ஞாபகமில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 6 மணியளவில் கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்வதற்காக நானும் எனது மகன் சிவனேசனும் பஸ் ஏறுவதற்காக ரோட்டில் சென்றபோது 44 எண் கொண்ட அரசு பேருந்து வல்லாளபட்டியிலிருந்து வேகமாக வந்து என்மீதும், எனது மகன் மீதும் மோதியதில் நானும் என் மகனும் கீழே விழுந்துவிட்டோம். பேருந்தின் முன்பக்க டயர் என்மீதும், எனது மகன் மீதும் ஏறியது. எனக்கு இடதுபக்க தொடையில் பலத்த காயம் ஏற்பட்டது. எனது மகனுக்கு கையில் காயம் ஏற்பட்டது. எனக்கு இடது கையிலும் பலத்த காயம் ஏற்பட்டது.

காயம்பட்ட என்னை அருகிலிருந்தவர்கள் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பேருந்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக நான் 3 மாதங்கள் சிகிச்சையிலிருந்தேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் மருத்துவனைக்கு வந்து என்னை விசாரித்தனர். என்னிடம்

காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஜெயராணி என்பவர் சம்பவத்தின்போது பால் வாங்க வந்தார். ஜெயராணி புகார் வாக்கு மூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தார். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**: எதிரிதரப்பில்

உங்களுக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் சொன்னதுபோல் அரசுப்பேருந்து வல்லாளபட்டியிலிருந்து அழகர்கோயில் நோக்கி சென்றுகொண்டிருந்தது என்றால் ஆமாம். விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தபொது விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. பேருந்து வந்துகொண்டிருந்தது. கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்ததிற்கு முன்பாக ஒரு வேகத்தடையும், பேருந்து நிறுத்தத்திற்கு அடுத்து ஒரு வேகத்தடையும் சம்பவ இடத்தில் இருந்தது என்றால் இல்லை. முட்டுக்கல்லுதான் போட்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் பள்ளிக்கூடம் இருந்த காரணத்தினால் சம்பவ இடத்திற்கு முன்பு உள்ள இடத்திலும், சம்பவ இடத்திற்கு அடுத்துள்ள இடத்திலும் 2 வேகத்தடைகள் உள்ளது என்றால் சம்பவ சமயத்தில் இல்லை, வேகத்தடை தற்போதுதான் போட்டுள்ளார்கள். இரண்டு வேகத்தடைக்கும் இடையில்தான் பேருந்து நிறுத்தம் இருந்தது என்றும், அவ்வாறு 2 வேகத்தடைக்கும் இடைப்பட்ட இடைவெளியில்தான் அரசு பேருந்து நின்றது என்றும் வழக்கிற்காக உங்களால் வேகத்தடை ஏதும் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல.

நீங்கள் மதுரை பெரியாஸ்பத்திரிக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு மதுரை பெரியாஸ்பத்திரிக்கு செல்லவேண்டும் என்றால் சம்பவ இடத்திற்கு தெற்கு பகுதியில்தான் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றும், நீங்கள் தெற்கு பகுதியில்தான் நிற்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். வெயில் அதிகமாக இருந்ததால் வடக்கு பகுதியில் நின்றிருந்தேன். நீங்கள்தான் கவனக்குறைவாக வண்டியின்மீது விழுந்துவிட்டீர்கள் என்று சொன்னால் அது பொய். ஓட்டுநர்தான் வேகமாக பேருந்தை ஓட்டி வந்தார். பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நின்றுகொண்டு கிளம்பியதால் வேகமாக கிளம்பவேண்டிய அவசியமில்லை என்றும், நீங்கள் வழக்கிற்காக பொய்யாக எதிரி அரசு பேருந்தை வேகமாக ஓட்டிவந்ததாக சொல்கிறீர்கள் என்றால் அது பொய். சம்பவம் நடத்ததற்கு பின்பு என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது. போலீசார் உங்களை விசாரித்தனரா என்றால் மருத்துவமனையில் வந்து விசாரித்தனர். போலீசார்

உங்களை எத்தனை நாட்கள் கழித்து வந்து விசாரித்தனர் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. உங்களுக்கு விபத்து நடந்ததற்கு பின்பு மயக்கம் ஏற்பட்டுவிட்டதாக சாட்சி விசாரணையில் சொல்கிறீர்கள் அதன்படி எப்பொழுது உங்களுக்கு நினைவு திரும்பியது என்றால் என்னை எந்த மருத்துவமனையில் சேர்த்து மருத்துவ சிகிச்சை அளித்தார்கள் என்ற விவரம் தெரியாது. போலீசார் உங்களை விசாரித்தது தெரியாது என்று சொன்னால் தெரியாது. நான் மயக்கதத்தில் இருந்தேன்.

நீங்கள் தற்போது சொல்லியதுபோல் எதிரிமீது எந்த தவறுமில்லை என்றும், எதிரி கவனமாகவும், மெதுவாகவும் பேருந்தை ஓட்டி வந்தார் என்றாலும், நீங்கள் எதிர்திசையிலிருந்து கவனக்குறைவாக வந்து பேருந்தில் ஏறும்போது நீங்கள்தான் பேருந்தில் விழுந்துவிட்டீர்கள் என்று சொன்னால் அது பொய். அது சரியல்ல. நீங்கள் விபத்து இழப்பீடு பெறுவதற்காக எதிரிமீது பொய்யாக புகார் கொடுத்து உங்களுடைய கவனக்குறைவை மறைத்து எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்று சொன்னால் அது சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C. No.548 /19

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Mathavan | Father/Husband Name | : Karuppan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.10.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

(**Accused present.**

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் கிடாரிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் லோடுமேனாக வேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடத்திற்கு முன்பு காலை 6 மணியளவில் பேருந்திற்காக மலர்விழி மற்றும் அவருடைய மகனும் கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். நான் அப்போது அருகிலுள்ள கடையில் டீ குடித்துக்கொண்டிருந்தேன். கிடாரிப்பட்டியிலிருந்து பெரியார் நோக்கி செல்லும் அரசு பேருந்து வந்தது. பஸ் ஏற மலர்விழியும், அவரது மகனும் வந்தபோது நின்றகொண்டிருந்த பேருந்து திடீரென நகர்ந்ததால் மலர்விழி மற்றும் அவரது மகன்மீது பேருந்து முன்பக்க வலதுபுற டயர் ஏறியது. மலர்விழியின் இடதுபக்க தொடையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அவரது மகனுக்கு சிறிய காயம் ஏற்பட்டது. அப்போது நான், குமரேசன், சின்னையன் ஆகியோர்கள் சம்பவ இடத்திலிருந்தோம். மலர்விழி மற்றும் அவரது மகனையும் சக்கரத்தில் சிக்கியிருந்தவர்களை நானும், குமரேசன் மற்றும் சின்னையனும் வெளியில் இழுத்தோம். அப்போது பேருந்தின் ஓட்டுநரை பேருந்தை நகர்த்தவேண்டாம் என்று நான் கேட்டுக்கொண்டேன். பேருந்து ஓட்டுநரை நான் சம்பவ இடத்தில் பார்த்தேன். ஆஜர் எதிரிதான் பேருந்தை ஓட்டி வந்தார். விபத்திற்கு காரணம் பேருந்தின் ஓட்டுநர் இடதுபக்க கண்ணாடியை பார்த்துக்கொண்டிருந்தார். மலர்விழியும், அவரது மகனும் ரோட்டை கடந்து வந்ததை பார்க்கவில்லை. பேருந்தின் பதிவெண் எனக்கு

தெரியாது.  பின்னர் 108-க்கு தகவல் சொல்லி காயம்பட்ட  இருவரையும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம்.  போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தனர், நடந்ததை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை:** (எதிரிதரப்பில்)

எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C. No.548 /19

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Chinnaiyan | Father/Husband Name | : Mathavan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.10.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

**(Accused present.**

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் கிடாரிப்பட்டியில் ஆத்துப்பாலத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயவேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடத்திற்கு முன்பு காலை 8 மணியளவில் நானும், குமரேசன், மாதவன் ஆகியோர்கள் டீ குடித்துக்கொண்டிருந்தபோது பேருந்திற்காக மலர்விழி மற்றும் அவருடைய மகனும் கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். கிடாரிப்பட்டியிலிருந்து பெரியார் நோக்கி செல்லும் அரசு பேருந்து வந்தது. பஸ் ஏற மலர்விழியும், அவரது மகனும் வந்தபோது நின்றகொண்டிருந்த பேருந்து திடீரென நகர்ந்ததால் மலர்விழி மற்றும் அவரது மகன்மீது பேருந்து முன்பக்க வலதுபுற டயர் ஏறியது. மலர்விழியின் இடதுபக்க தொடையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அவரது மகனுக்கு சிறிய காயம் ஏற்பட்டது. அப்போது நான், குமரேசன், சின்னையன் ஆகியோர்கள் சம்பவ இடத்திலிருந்தோம். மலர்விழி மற்றும் அவரது மகனையும் சக்கரத்தில் சிக்கியிருந்தவர்களை நானும், குமரேசன் மற்றும் சின்னையனும் வெளியில் இழுத்தோம். அப்போது பேருந்தின் ஓட்டுநரை பேருந்தை நகர்த்தவேண்டாம் என்று நான் கேட்டுக்கொண்டேன். பேருந்து ஓட்டுநரை நான் சம்பவ இடத்தில் பார்த்தேன். ஆஜர் எதிரிதான் பேருந்தை ஓட்டி வந்தார். விபத்திற்கு காரணம் பேருந்தின் ஓட்டுநர் இடதுபக்க கண்ணாடியை பார்த்துக்கொண்டிருந்தார். மலர்விழியும், அவரது மகனும் ரோட்டை கடந்து வந்ததை பார்க்கவில்லை. பேருந்தின் பதிவெண் எனக்கு தெரியாது.

பின்னர் 108-க்கு தகவல் சொல்லி காயம்பட்ட இருவரையும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தனர், நடந்ததை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை:** (எதிரிதரப்பில்)

எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C. No.548 /19

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Jeyarani | Father/Husband Name | : Aasaithambi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.10.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

(**Accused present.**

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் கிடாரிப்பட்டியில் ஆத்துப்பாலத்தில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். தேதி ஞாபகமில்லை, 2018ம் வருடம் காலை 6 மணியளவில் பேருந்திற்காக மலா்விழி மற்றும் அவருடைய மகனும் கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தாா்கள். மலா்விழி மருத்துவமனைக்கு செல்வதற்காக பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தாா்கள். நான் அப்போது பால் வங்குவதற்காக அங்கு வந்தேன். கிடாரிப்பட்டியிலிருந்து பெரியாா் நோக்கி செல்லும் அரசு பேருந்து வந்தது. பஸ் ஏற மலா்விழியும், அவரது மகனும் வந்தபோது நின்றகொண்டிருந்த பேருந்து திடீரென நகா்ந்ததால் மலா்விழி மற்றும் அவரது மகன்மீது பேருந்து முன்பக்க வலதுபுற டயா் ஏறியது. மலா்விழியின் இடதுபக்க தொடையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அவரது மகனுக்கு சிறிய காயம் ஏற்பட்டது. பேருந்து எந்த திசையிலிருந்து வந்தது என்று எனக்கு சரியாக தெரியாது. சம்பவ இடத்தில் குமரேசன், சின்னையன் ஆகியோா்கள் சம்பவ இடத்திலிருந்தாா்கள். மலா்விழி மற்றும் அவரது மகனையும் சக்கரத்தில் சிக்கியிருந்தவா்களை மாதவன், குமரேசன் மற்றும் சின்னையனும் வெளியில் இழுத்தாா்கள். பேருந்து ஓட்டுநரை நான் சம்பவ இடத்தில் பாா்த்தேன். பேருந்து ஓட்டுநரை எனக்கு நன்றாக தெரியும். அடிக்கடி அந்த பேருந்தில் செல்வால் எதிரியை நன்றாக தெரியும். ஆஜா் எதிரிதான் பேருந்தை ஓட்டி வந்தாா். போலீசாா் வழக்கு சம்மந்தமாக

விசாரித்தனர், நடந்ததை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை:** (எதிரிதரப்பில்)

எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C. No.548 /19

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Jogaraja | Father/Husband Name | : Chandrabose |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.10.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

(**Accused present.**

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் கிடாரிப்பட்டியில் ஆத்துப்பாலத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். 6-வது மாதம் 2018ம் வருடம் தேதி ஞாபகமில்லை, விபத்தானது காலை 6 மணியளவில் கிடாரிப்பட்டி தனியார் வங்கியின் அருகில் நடந்தது. விபத்து நடந்த சமயத்தில் அங்கு நான் டீ சாப்பிடுவதற்கா வந்தேன். மலர்விழி மருத்துவமனைக்கு செல்வதற்காக பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கிடாரிப்பட்டியிலிருந்து பெரியார் நோக்கி செல்லும் அரசு பேருந்து வந்தது. பஸ் ஏற மலர்விழியும், அவரது மகனும் வந்தபோது நின்றகொண்டிருந்த பேருந்து திடீரென ஆரன் அடிக்காமல் நகர்ந்ததால் மலர்விழி மற்றும் அவரது மகன்மீது பேருந்து முன்பக்க வலதுபுற டயர் ஏறியது. மலர்விழியின் இடதுபக்க தொடையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அவரது மகனுக்கு சிறிய காயம் ஏற்பட்டது. பேருந்து ஓட்டுநரை நான் சம்பவ இடத்தில் பார்த்தேன். ஆஜர் எதிரிதான் பேருந்தை ஓட்டி வந்தார். போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தனர், நடந்ததை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை:** (எதிரிதரப்பில்)

எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C. No.548 /19

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Kumaresan | Father/Husband Name | : Aananthan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.10.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

**(Accused present.**

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் கிடாரிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் டீ கடை வைத்துள்ளேன். தேதி ஞாபகமில்லை, சுமார் 6 வருடத்திற்கு முன்பு காலை 6 அல்லது 06.30 மணியளவில் கிடாரிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் விபத்து நடந்தது. சம்பவ இடத்தில் நானும், மாதவன், சின்னையா ஆகியோர்கள் இருந்தோம். விபத்தானது மலர்விழி மற்றும அவருடைய மகன் சாலையை கடந்து பேருந்து நிறுத்ததிற்க வந்தபோது எதிரி பேருந்தை நகர்த்தினார். பேருந்தின் ஓட்டுநர் சரியாக கவனிக்காமல் பேருந்தை நகர்த்தியதால் விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டபிறகு நானும், மாதவன், சின்னையா ஆகியோர்கள் சம்பவ இடத்தில் சக்கரத்தில் சிக்கிசய மலர்விழியை வெளியில் இழுத்தோம். பேருந்தானது கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வந்துகொண்டிருந்தது. பேருந்தின் எண். 44 ஆகும். பேருந்து ஓட்டுநரை சரியாக எனக்கு தெரியாது. பார்க்கவில்லை. விபத்திற்கு காரணனம் ஓட்டுநர் சரியாக கவனமின்றி பேருந்தை எடுத்ததானல்தான் விபத்து ஏற்பட்டது. காயம்பட்ட இருவரையும் ஆம்புலன்சில் ஏற்று மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:** (எதிரிதரப்பில்)

எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.